திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : தலைவரவர்களே, இந்த அறிக்கையிலே சொல்லியிருக்கின்றபடி அந்தத் தொழிற்சாலை நிதி நெருக்கடி என்ற காரணத்தால் மூடப்பட்டிருக்கிறது. ஆகவே, நிதி நெருக்கடியைப் போக்கி, அந்தத் தொழிற்சாலையைத் திறக்க உத்தரவாதம் அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: தலைவர் அவர்களே, நிதி நெருக்கடி போக்கப்பட அந்த நிறுவனம் முன் வரவேண்டும். முறைப்படி கேட்கப்பட வேண்டும். அத்தகைய சூழ்நிலைகள் உருவானால்தான் அரசு பரிசீலனை செய்து, நிதிப் பற்றாக்குறையைப் போக்க ஏற்பாடு செய்ய முடியும்.

பீடித் தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்கள்.

199—(* வினா எண். 992) திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் பீடித் தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்களுக்குத் தர வேண்டிய பாஸ் புக் பீடி முதலாளிகளால் மறுக்கப்பட்டு வருவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : (அ) மற்றும் (ஆ) தலைவரவர்களே, பீடி சுற்றுகின்ற தொழிலாளர்களுக்கு கலால் பிரிவைச் சேர்ந்தவர்களால் பாஸ் புத்தகம் வழங்கப்படுகிறது. அந்தக் கலால் பிரிவு மத்திய அரசைச் சேர்ந்தது. பாஸ் புத்தகம் எதற்காக வழங்கப்படுகிறது என்றால் புகையிலை எடுத்துச் செல்லுகிறபோது உரியவர்கள்தான் எடுத்துச் செல்லுகிறார்களா அல்லது வேறு நபர் யாராவது அந்தப் புகையிலையை எடுத்துச் செல்லுகிறார்களா என்பதைத் தெரிந்து கொள்வதற்காக மத்திய அரசைச் சேர்ந்த கலால் பிரிவினால் பாஸ் புத்தகம் வழங்கப்படுகிறது. ஆகவே, அதில் மாநில அரசு எதையும் செய்வதற்கில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1989 மே 4]

திருமதி பாப்பா உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் நெல்லை, திருச்சி வடாற்காடு மாவட்டங்களில் சுமார் 3 இலட்சம் பெண்கள் பீடித் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். 1966 ஆம் ஆண்டு பீடி, சுருட்டு தொழிலாளர்கள் சட்டத்தின்படி யார் வேலை செய்கிறாரோ அவர் பெயரில்தான் பாஸ் புக் அல்லது அடையாள அட்டை கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுக்க முடியாத சூழ்நிலையில் அதிலே அரசுக்குப் பொறுப்பு இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஆகவே, கலால் பிரிவு அல்ல. மேலும், பீடி, சுருட்டுத் தொழிலாளர்கள் பெண்களாக இருப்பதால், அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற பெண்கள் பெயரில் பாஸ் புக் கொடுக்காமல் அவர்களுடைய தகப்பன் பெயரில், கணவன் பெயரில் கொடுப்பதாகச் சொல்லப் படுகிறது. அப்படி இல்லாமல் வேலையில் ஈடுபட்டிருக்கிற பெண்கள் பெயரிலேயே பாஸ் புக் கொடுக்க ஏற்பாடு செய்யப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாஸ் புத்தகம் என்பது மத்திய அரசின் கலால் பிரிவினரால் தரப்படுவது. 'லாக் புக்' என்பது மாநில அரசால் வழங்கப்படுவது. இரண்டிலும் கிட்டத்தட்ட ஒரே விவரங்கள்தான் இருக்கின்றன. அந்த வகையில் லாக் புக் யார் யாருக்கு வழங்கப்படவில்லையோ அவர்களுக்கு வழங்கப்பட அரசு வலியுறுத்தி, தொடர்புடைய அதிகாரிகளிடம் தெரிவித்திருக்கிறது. அதில் முறைகேடுகள் இருந்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திருமதி பாப்பா உமாநாத்: தலைவரவர்களே, பொதுவாக முதலாளிகள், இவர்கள் வீட்டுக்குள் வேலை செய்வதால் தான் பாஸ் புக் கொடுக்க முடியவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். 1982-ல் சுப்ரீம் கோர்ட் இது சம்பந்தமாக தீர்ப்பு ஒன்றை வழங்கியிருக்கிறது. இந்தப் பெண் தொழிலாளர்களுக்கு வாராந்தர ஓய்வு, பிரசவ கால ஓய்வு, ஆகியவை கொடுக்கப்படுவதில்லை; பிராவிடன்ட் ஃபண்டு பிடிக்கப் படுவதில்லை. ஆகையால் அவர்கள் ஒரு பாதுகாப்பற்ற

நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அரசாங்கம் இதுபற்றி தீர விசாரித்து ஒரு நல்ல முடிவை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் நிறுவனங்களிலே சென்று வேலை செய்பவர்கள், பீடி சுற்றுபவர்கள் என்று ஒரு பகுதியினர். இன்னொரு பகுதியினர் புகையிலையைத் தங்கள் இல்லங்களுக்கு எடுத்துச் சென்று பீடி சுற்றுபவர்கள் ஒரு பகுதியினர். இல்லங்களிலே புகையிலையை எடுத்துச் சென்று பீடி சுற்றுகின்ற தொழிலாளர்களில் ஆண்கள், இருக்கிறார்கள் ; பெண்கள் இருக்கிறார்கள் ; சிறுவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பல்வேறு படிவங்கள்—விடுப்புப் படிவங்கள், ஊதியத்தைக் குறிக்கின்ற படிவங்கள்—எல்லாம் வைத்துக்கொள்ள தேவையில்லை என்று முன்னால் விதிவிலக்கு வழங்கப்பட்டது. அதற்குப் பின்னாலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் ஆங்காங்கே தெரிவிக்கப் பட்ட கருத்துக்களை மையமாக வைத்து, விதிவிலக்கு வழங்கக்கூடாது ; விதிவிலக்கு வழங்கியிருந்தாலும் அது ரத்து செய்யப்பட வேண்டும் என்ற அடிப்படையில் சம்பந்தப் பட்டவர்களுக்கு அரசின் சார்பில் அறிக்கை கொடுக்கப் பட்டிருக்கிறது. விதிவிலக்குகள் ரத்து செய்யப்படாமல் இருக்குமானால் அப்படிப்பட்ட நிலைமைகள் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்தின் அடிப்படையில் மாற்றியமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரூராட்சிகளில் ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டுதல்.

200—(* வினா எண். 3413) **திரு. வ. முல்லைவேந்தன் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூராட்சிகளில் ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?